ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2184/18 - 2020 ජූලි මස 15 වැනි බදාදා - 2020.07.15

*2184/18 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### *1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம்*

*33 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்*

*2020 ஆம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலை நடாத்துவது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2165/8 ஆம் இலக்க, 2020.03.02 ஆந் திகதிய, 2167/12 ஆம் இலக்க, 2020.0320 ஆந் திகதிய, 2167/19 ஆம் இலக்க, 2020.03.21 ஆந் திகதிய, 2172/3 ஆம் இலக்க, 2020.04.20 ஆந் திகதிய, 2179/7 ஆம் இலக்க, 2020.06.09 ஆந் தகிதிய மற்றும் 2179/17 ஆம் இலக்க, 2020.06.10 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகைககள் தொடர்பானது.*

*மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2167/ 12 ஆம் இலக்க, 2020.03.20 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் முதலாம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள "II. அந்த ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்குமான தேர்தல் 2020, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி சனிக்கிழமை மு. ப. 7.00 மணி முதல் பி. ப. 4.00 மணி வரை இடம்பெறுமெனவும் ; 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1) (அ) மற்றும் (இ) ஆம் பிரிவுகளின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது" எனும் கட்டளை, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(3) ஆம் பிரிவிற்கமைய 2020 ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதிய, 2172/3 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலூடாக அந்தத் திகதி 2020.06.20 ஆந் திகதியென விதித்துரைக்கப்பட்டுள்ளது. அந்த விதித்துரைப்பும் 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24 ஆம் மற்றும் 33 ஆம் பிரிவுகளின் அதிகாரங்களுக்கிணங்க கீழ்க் குறிப்பிடப்படும் விதத்தில் திருத்தம் செய்யப்படுகின்றது.*

*"II. அந்த ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் வாக்கெடுப்பு 2020 ஓகத்து மாதம் 05 ஆந் திகதி புதன்கிழமை மு. ப. 7.00 மணி முதல் பி. ப. 5.00 மணிவரை இடம்பெறுமெனவும் ;*

1A - PG 5060 — 267 (2020/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 24(1)(அ) மற்றும் (இ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.".*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தவிசாளர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*என். ஜே. அபேசேகர,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*எஸ். ரத்னஜீவன் எச். ஹூல்,*
*அங்கத்தவர்,*
*தேர்தல் ஆணைக்குழு.*

*தேர்தல் ஆணைக்குழு,*
*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2020, யூலை 15.*

*07-788*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.